# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டம்*

---

*(2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை: ரூபா 18.25** **தபாற் செலவு: ரூபா 7.50**

## 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 98/2002

**நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காகவும் நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதற்காகவும் அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

டெங்குக் காய்ச்சல் மற்றும் டெங்கு இரத்தப்போக்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டோரினதும் இந்நோயினால் இறப்பவர்களினதும் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருவதையடுத்து இந்நோய் இலங்கையில் பொதுமக்களின் பாரிய சுகாதாரப் பிரச்சினையாகியுள்ளதாலும் :

அத்துடன் இத்தீவிர நோயைத் தடுப்பதற்கான தடுப்பு மருந்துகளோ அல்லது இந்நோயை குணமாக்கக்கூடிய ஏதேனும் குறிப்பிட்ட சிகிச்சை முறைகளோ தற்போது இல்லாததலாலும் :

அத்துடன், இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் கட்டுப் படுத்துவதற்குமான ஒரே ஒரு முறை, இந்நோய் பரவுகின்ற நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்தொழிப்பதே ஆகும் ஆதலாலும்:

அத்துடன், தேசிய கண்ணோட்டத்தில் தேசிய கொள்கை யொன்றை வகுத்தமைத்தல் மூலமும் அத்தகைய தேசிய கொள்கை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியொருவரையும் வேறு அலுவலர்களையும் நியமிப்பதன் மூலமும் இந்த சுகாதாரப் பிரச்சினையை பயனுள்ளவகையில் கையாள்வது அவசியமாகியுள்ளதாதலாலும் :

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (1) நுளம்பினால் பெருகும் சகல நோய்களையும் தடுப்பத னையும் அழிப்பதனையும் உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக பின்வருவனவற்றைச் செய்வித்தல் ஏதேனும் வளவின் ஒவ்வொரு சொந்தக்காரரதும் குடியிருப்பாளரதும் கடமையாதல் வேண்டும் :— *நுளம்புப் பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகளை உருவாக்குவதற்கு எதிரான தடை.*

(அ) அத்தகைய ஏதேனும் வளவுகளில் உள்ள அல்லது காணப்படும் நீர் தேங்கி நிற்கக்கூடிய திறந்த தகரங்கள், போத்தல்கள், பெட்டிகள், தென்னஞ் சிரட்டைகள், உடைத்த தேங்காய்கள், டயர்கள் அல்லது ஏனைய பொருள் அல்லது கொள்கலன்கள் என்பனவற்றை அகற்றுதல் அல்லது அழித்தல் அல்லது திறனான வேறு முறையில் ஒழித்துவிடல் ;

(ஆ) நீரோட்டத்தை சீரானமுறையில் ஓடச்செய்வதற்காக நீர்வடிகுழாய், தாழ் குழாய்கள், காண்கள் என்பவற்றில் காணப்படும் எல்லாத் தடைகளையும் நீக்குதல் ;

(இ) நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காக நீர் வெளியேற்றும் குழாயையுடைய நீர்த்தொட்டிகள், நீர் தாங்கிகள், குளி ரூட்டிகள் மற்றும் நீர்க்கொள்கலன்கள் என்பனவற்றை நல்லமுறையில் பேணுவதுடன் மூடியவாறும் பேணுதல்;

(ஈ) வளவுகளுள்ளும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் காணப்படும் ஏதேனும் கிணறுகளை திருத்திய நல்ல முறையில் நுளம்புகள் வராதவாறு பேணி வருவதுடன் அவ்வாறு பேணுவதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைத் தடுத்தலும் ;

(உ) அத்தகைய வளவுகளுள் செயற்கையாக அமைக்கப் பட்டுள்ள எந்தவொரு குளம் அல்லது குட்டைகளை கிழமைக்கு ஒரு முறையாவது வெறுமையாக்குதல் ;

(ஊ) வளவுகளுள் நுளம்புப் பெருக்கத்துக்குச் சாதகமான தற்செயலாக ஏற்பட்ட நீர்ச்சேகரிப்புகளை கிரமமாக வழிந்தோடவிடல் ;

(எ) வாழ்விடமாகப் பாவிக்கப்படும் ஏதேனும் கட்டடத் தொகுதியினுள் அல்லது வெளியே அல்லது வளவுக ளின் அமைப்பினுள் காணப்படும் நுளம்பு பெருக்கத் தினை உருவாக்கும் புதர்கள், புற்கள், உணவிற்காகவும், அழகுக்காகவும் வளர்க்கப்படும் மரக்கறிகள் தவிர்ந்த ஏனைய சகலவகையான பயிர்ச்செய்கை போன்றவற்றை அகற்றுதல் ;

(ஏ) நுளம்புகளின் பெருக்கத்திற்கு உதவக்கூடிய "பிஸ்டியா ஸ்ரடிரேடியோட்" எனும் தாவரவியற் பெயரையுடைய "டியா – பரன்டல்", "கொண்டைபாசி", "டெல்பாசி", "பரவா–பாசி", "நாநயவிறாடி" என அறியப்படும் தாவரங்களையும் ஏனைய நீர்த் தாவரங்களையும் அகற்றலும் அழித்தலும் ;

(ஐ) அவசியமானவிடத்து ஏதேனும் இயைபான அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்று, ஏதேனும் நீர் நிலையை நோக்கிச் சென்று படரக்கூடிய அத்தகைய தாவரங்களின் படரலை நிறுத்துவதற்கான பொருத்தமான தடைகளைக் கட்டியெழுப்புதல் மூலம் பந்தி (ஏ) யில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீர்த் தாவரங்களின் படரலைத் தடைசெய்தல் ; அத்துடன்

(ஒ) வளவுகளில் அல்லது வளவுகளினுள் நுளம்புகளின் பெருக்கத்திற்கு சாதகமான வேறு ஏதேனும் நிலைமைகளை அகற்றுதல் அல்லது தடுத்தல்.

**3.** (1) ஏதேனும் வளவுகள் அல்லது அவற்றினுள் வைத்திருக்கப்படும் அல்லது பேணப்படும் எதுவும், நுளம்புப் பெருக்கத்திற்கு சாதகமானதென தகுதி வாய்ந்த அதிகாரிக்குத் தோன்றுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் அத்தகைய வளவுகளின் சொந்தக்காரரை அல்லது குடியிருப்பாளரை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பின்வரும் வழிவகைகளில் ஒன்றையோ பலவற்றையோ கடைப்பிடிக்குமாறு அல்லது எடுக்குமாறு தேவைப்படுத்தலாம். – சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் குறித்த வழிவகைகளை மேற்கொள்ளப் பணிக்கப்படுதல்.

(அ) அந்த வளவுகளுள் காணப்படும் கட்டிடங்களின் எல்லா நீர்வடிகுழாய்கள், தாழ்குழாய்கள், காண்கள் என்பவற்றைத் திருத்துதல் ;

(ஆ) அந்த வளவுகளுள் காணப்படும் நீர் வெளியேற்றும் குழாயையுடைய நீர்த்தொட்டிகள், நீர்தாங்கிகள் அல்லது செயற்கையான குளங்கள் என்பவற்றை ஒழுங்கான முறையில் வெறுமையாக்கக்கூடிய அத்தகைய விதத்தில் நிருமாணித்தல் அல்லது மீள நிருமாணித்தல் ;

(இ) அந்த வளவுகளில் காணப்படும் ஏதேனும் நீர் வெளியேற்றும் குழாயையுடைய நீர்த்தொட்டிகள், நீர்த்தாங்கிகள், குளங்கள் என்பவற்றைத் தற்காலிகமாக வழிந்தோடச் செய்தலும், துப்புரவு செய்தலும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரால் நீண்டகாலமாக உபயோகிக்கப்படாதவிடத்து அவற்றை மூடிவிடலும் ;

(ஈ) நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காக, அந்த வளவுகளுள் அத்தகைய நிலைமைகளில் காணப்படும் ஏதேனும் கிணற்றைப் பேணுதல் ;

(உ) நீர் சேகரிக்கப்படக்கூடிய, தேங்கி நிற்கக்கூடிய ஏதேனும் குழிகள், பாவிக்கப்படாத கிணறுகள், கழிவுநீர்க்குழிகள், குளங்கள் அல்லது வேறு ஏதேனும் இடங்களை நிரப்புதல் வழிந்தோடச்செய்தல் அல்லது கிருமிநாசினி தெளித்தல் ;

(ஊ) அந்த வளவுகளுள் காணப்படும் குழிகள், தாழ்நிலங்களை நிரப்புதல் ;

(எ) அந்த வளவுகளுள் காணப்படும் சகதிகள், நீர் ஓட்ட இடப்பரப்புக்கள், மரத்துண்டுகள்மீது கிருமிநாசினி தெளித்தல் அல்லது கிழமைக்கு ஒருமுறை நிரப்புதலும் வடிந்தோடச் செய்தலும் ;

(ஏ) நுளம்புகளின் பெருக்கத்தை அதிகரிக்கக்கூடிய “பிஸ்டியா ஸ்ரடிரேடியோட்ஸ்” எனும் தாவரவியற் பெயரையுடையதும் வழமையாக உள்ளூரில் “டியா – பரன்டல்”, “கொண்டபாசி”, “டெல் பாசி”, “பரவ பாசி”, “நாநயவிரட்டி” எனும் பெயர்களால் பொதுவில் அறியப்படும் நீர்த்தாரவங்களை அல்லது வேறு ஏதேனும் நீர்த்தாவரங்களை அல்லது தாவரங்களை அகற்றல், பிடுங்கல் அல்லது அழித்தல் ;

(ஐ) நீரால் படரக்கூடிய அத்தகைய தாவரங்களின் படரலை நிறுத்துவதற்கான பொருத்தமான தடைகளைக் கட்டியெழுப்புதல்மூலம் பந்தி (ஏ) யில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நீர்த் தாவரங்களின் படரலைத் தடைசெய்தல்; அத்துடன்

(ஒ) தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பொதுச் சுகாதார பரிசோதகர் அவசியமெனின் கருதக்கூடியவாறான வேறு ஏதேனும் வழிவகைகள் எடுத்தல்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்து மூலமான அறிவித்தல், சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதில் அசட்டை செய்யுமிடத்து அல்லது தவறுமிடத்து தகுதிவாய்ந்த அதிகாரி, அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கு கட்டாயப்படுத்தல் வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட எவையேனும் செலவுகள் அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டுமென மேலும் அறிவித்தலும் வேண்டும்.

*2 ஆம், 3 ஆம் பிரிவுகளில் விதிக்கப்பட்ட தேவைப் பாட்டுடன் இணங்கத் தவறுதல் தவறொன்றாதல்.*

**4.** (1) இச்சட்டத்தின் 2 ஆம் அல்லது 3 ஆம் பிரிவினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாடுகளை அல்லது கடமைகளை மீறுகின்ற அல்லது இணங்கியொழுகத் தவறும் ஒவ்வொரு சொந்தக்காரரும் அல்லது குடியிருப்பாளரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும், மேலும் தவறு தொடர்ந்து புரியப்படுமிடத்து குற்றத்தீர்ப்பின் பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபா குற்றப் பணத்திற்கும் ஆளாதல் வேண்டும் :

ஆயின் அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அத்தகைய தவறு தனது அறிவுக்கு எட்டாதவகையில் புரியப்பட்டதெனவும், அத்தகைய தவறைக் தடுக்க சகல விழிப்பு கவனத்தையும் பிரயோகித்துள்ளார் எனவும் , நீதிவானின் திருப்திக்கு ஏற்ப நிரூபிப்பாராயின் அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படமாட்டார்.

(2) எவரேனும் ஆள் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் விதிக்கப் பட்ட கடமையுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளார் என அறியப் பட்டால் நீதிவான் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் மீது கடமைகளுக்கு இணங்க, நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காக நீதிவான் பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய திருத்த வழிவகைகளை அல்லது தடுப்பு வழிவகைகளை மேற்கொள்ளுமாறு அத்தகைய சொந்தக்காரரை அல்லது குடியிருப்பாளரைத் தேவைப்படுத்தலாம்.

*தகுதி வாய்ந்த அதிகாரி வேலை அல்லது வழி வகைகளை நிறைவேற்றல்.*

**5.** (1) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்பட்ட ஏதேனும் வளவுகளினுள் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதில் அசட்டை செய்யுமிடத்து அல்லது தவறுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, நாளின் நியாயமான நேரத்தில் அத்தகைய வளவுகளுக்குள் உட்பிரவேசித்து அந்தச் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அலட்சியப்படுத்திய அல்லது செய்யத் தவறிய அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வழிவகைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்கேற்ப எவரேனும் அலுவலருக்கு அல்லது அலுவலர் களுக்கு எழுத்தில் அங்கீகாரம் அளிக்கலாம். இவ்வுட்பிரிவின் கீழ் ஏதேனும் வேலை அல்லது வழிவகைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அத்தகைய அலுவலர் அல்லது அலுவலர்கள் தகுதி வாய்ந்த அதிகாரியினால் அத்தகைய வேலை அல்லது வழிவகைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளித்து வழங்கப் பட்ட ஆவணத்தில் பிரதியொன்றைச் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்குக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளது எதுவும், வழங்கப்பட்ட அறிவித்த லுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஒரு சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் மீது இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தவ றொன்றுக்குக் குற்றவழக்கு தொடரப்படுவதைத் தடுத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் வேலை அல்லது வழிவகை மேற்கொள்ளப்படுமிடத்து அல்லது நிறைவேற்றப்படுமிடத்து, உறப்பட்ட செலவினங்களின் தொகை அக்கொடுப்பனவுக்கான

கோரிக்கை அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பாளரால் தகுதிவாய்ந்த அதிகாரிக்குக் கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த வளவுகளின் சொந்தக்காரர் தொடர்பில் பணத்தொகை வருமதியானதாகவும் செலுத்தப்படவேண்டியதாகவுமுள்ளதோ அச்சொந்தக்காரர் அப்பணத்தொகைக் கொடுப்பனவிற்கு முன்னரே அத்தகைய வளவுகளை விற்குமிடத்து அல்லது கைமாற்றம் செய்யுமிடத்து, அத்தகைய வளவுகளின் விற்பனை அல்லது கைமாற்றம் எது எப்படியிருப்பினும், அத்தகைய சொந்தக்காரர் வருமதியான தொகையைச் செலுத்துவதற்குத் தொடர்ந்தும் ஆளாதல் வேண்டும்.

*பிரிவு 5 இன் கீழ் உறப்பட்ட செலவினம் அறவிடப்படல்.*

**6.** (1) சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுப்பனவுக்காக கோரிக்கை அறிவிக்கப்பட்ட இரண்டு கிழமைக்குள் கொடுப்பனவை செலுத்த தவறுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய வேலை அல்லது வழிவகைகளினை நிறைவேற்றுவதில் உறப்பட்ட செலவினங்களாக வருமதியான தொகையின் விபரங்கள் அடங்கிய சான்றிதழை அத்தகைய வளவுகள் அமைந்துள்ள இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானிற்கு வழங்குதல் வேண்டும்.

(2) அதன்மீத விடயத்துக்கேற்ப நீதிவான், அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரை வருமதியான தொகையை அறவிடுவதற்கு அவருக்கு எதிராக ஏன் மேலும் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தை அவர் முன் தோன்றிக் காட்டுமாறு அழைப்புவிடுத்தல் வேண்டும் என்பதுடன், போதிய காரணம் காட்ட தவறுமிடத்து அத்தொகை குற்றப் பணம் ஒன்றுடன் மாத்திரம் தண்டிக்கப்படற்பாலதான அல்லது மறியற் தண்டனையுடன் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறொன்றிற்காக அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பின் மூலம் விதிக்கப்பட்ட குற்றப் பணமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி சான்றிதழொன்றை வழங்குமிடத்து அவர் இயைபான சொந்தக் காரரர் அல்லது குடியிருப்பாளருக்கு அதுபற்றிய அறிவிப் பொன்றை வழங்கச் செய்வித்தல் வேண்டும். சொந்தக்காரரொரு வருக்கு அல்லது குடியிருப்பாளரொருவருக்கு வழங்கப்பட்ட அறி விப்பொன்று கிடைக்கப்பெறாமை இப்பிரிவின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளை செல்லுபடியற்றதாக்குதலாகாது.

(4) இப்பிரிவின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழில் உள்ள ஏதேனும் கூற்றுகளின் செம்மையை பரிசீலனை செய்யுமாறு, பரிசோதனை செய்யுமாறு அல்லது தீர்மானிக்குமாறு நீதிவா னொருவரை அதிகாரமளித்தலாகாது அல்லது தேவைப்படுத்த லாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குற்றப்பணமாக அறவிடப்பட்ட ஏதேனும் தொகை நீதிவானால் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

பீடைகொல்லி களைத் தெளித்தல்.

**7.** (1) தகுதிவாய்ந்த அதிகாரி ஏதேனும் வளவுகளின் எவரேனும் சொந்தக்காரரர் அல்லது குடியிருப்பாளர்மீது எழுத்துமூலமாக சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலின்மூலம், ஏதேனும் நீர் சேகரிக்கப் படக்கூடிய மற்றும் நுளம்புகள் பெருகக்கூடியதாகக் காணப்படக் கூடிய இடங்களாக உள்ள ஏதேனும் குளங்கள், நீர்வெளியேற்றும் குழாயையுடைய நீர்த் தொட்டிகள், நீர் ஊற்றுகள் என்பவற்றில் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வகையினதான பீடை கொல்லிக் கலவையை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தெளிக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பெற்ற அறிவித்தலுடன் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் இணங்கியொழுகத் தவறுதல் இச்சட்டத்தின்கீழான தவறொன்றாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அத்தகைய சொந்தக் காரரர் அல்லது குடியிருப்பாளர் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

*தகுதிவாய்ந்த அதிகாரி முதலியவர்களை எதிர்த்தல் அல்லது தடுத்தல்.*

**8.** (1) எவரேனும் சொந்தக்காரர், குடியிருப்பாளர் அல்லது வேறு எவரேனும் ஆள், கடமைகளை அல்லது பணிகளைச் சட்டப்படியாகப் புரியும் தகுதிவாய்ந்த அதிகாரியை அல்லது இச்சட்டத்தின்கீழான அவரது எவையேனும் கடமைகளை அல்லது பணிகள் கையளிக்கப்பட்ட எவரேனும் ஆளை அறிந்துகொண்டோ அல்லது வேண்டுமென்றோ எதிர்த்தலோ அல்லது தடுத்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயல்படுகின்ற எவரேனும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வேறு எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*மேற்கொள்ளப்பட்ட வழிவகையின் வினைத்திறனைக் குறைத்தல்.*

**9.** (1) சொந்தக்காரர் ஒருவர் அல்லது குடியிருப்பாளர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஆள் அறிந்துகொண்டு அல்லது வேண்டும் என்று —

(அ) ஏதேனும் வளவுகளில் நிறைவேற்றப்படும் அல்லது கடைப்பிடிக்கப்படும் ஏதேனும் நுளம்புத் தடுப்பு வழிவகைகளுக்கு பங்கத்தை விளைவிக்கும் ; அல்லது

(ஆ) ஏதேனும் வளவுகளில் நிறைவேற்றப்படும் அல்லது கடைப்பிடிக்கப்படும் நுளம்புத் தடுப்பு நடவடிக்கைகளின் வினைத்திறனைக் குறைக்கும்

சாத்தியமுள்ள ஏதேனும் வழிவகைகளை, விடயத்திற்கேற்ப வளவுகளின் சொந்தக்காரரினால் அல்லது குடியிருப்பாளரினால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியினால் நிறைவேற்றப்பட்டதாயினுஞ்சரி அல்லது கடைப்பிடிக்கப்பட்டதாயினுஞ்சரி புரிதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறிச் செயல்படுகின்ற எவரேனும் சொந்தக்காரர் குடியிருப்பாளர் அல்லது வேறு எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளி

யாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன் றுக்கு அல்லது மூன்று மாதத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*கூட்டுச் சொந்தக்காரரும் கூட்டுக்குடியிருப் பாளர்களும் தனித்தனியாக பொறுப்பாதல்.*

**10.** ஏதேனும் வளவுகள் ஓர் ஆளைவிட மேலதிகமானோரால் இருப்பாட்சி செய்யப்படும் போது அல்லது ஏதேனும் ஆதனம் ஒன்றுக்கும் மேலான ஆட்களினால் கூட்டுச் சொந்தமாக கொள்ளப்படும் போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவாக்கும் நோக்கத்துக்காக ஒவ்வொரு குடியிருப்பாளரும் ஒவ்வொரு கூட்டுச் சொந்தக்காரரும் இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாடுகளை அசட்டை செய்வதற்காக அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறியமைக்காக தனித்தனியாக பொறுப் பாதல் வேண்டும்.

*நல்லெண் ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்கான அல்லது செய்யா மைக்கான பாதுகாப்பு.*

**11.** நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமைக்காக ஒரு சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கெதிராக வழக்குத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

*பேணுமாறு தேவைப் படுத்துகின்ற காண்கள், கால்வாய்களைப் பேணத் தவறுகின்ற உள்ளூர் அதிகார சபைக்கு பணிப்புரைகள் வழங்கப்படல்.*

**12.** (1) ஏதேனும் ஒரு உள்ளூர் அதிகாரசபையின் நிர்வாக எல்லைகளுக்குள் காணப்படுவதும், உள்ளூர் அதிகாரசபை நன்நிலையில் பேணுமாறு தேவைப்படுத்தப்படுகின்றதுமான அத்தகைய ஏதும் காண், கால்வாய், நீர்ஊற்று அல்லது சேற்று நிலம் என்பனவற்றை அத்தகைய உள்ளூர் அதிகாரசபை உரிய முறையில் பேணத்தவறியமையால் அல்லது அசட்டை செய்த மையால் நுளம்புப் பெருக்கத்திற்கு வழிவகுக்கப்படுமாயின், தகுதிவாய்ந்த அதிகாரியானவர் நுளம்பு பெருகும் அத்தகைய நிலைமையைக் கட்டுப்படுத்த அல்லது தடைசெய்ய தான் அவசிய மானதென அல்லது தோதானதெனக் கருதும் பணிப்புரைகளை வழங்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஓர் உள்ளூர் அதிகாரசபை இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் தகுதிவாய்ந்த அதிகாரியால் அத்தகைய தவறுக்காகக் குற்றவழக்குத் தொடுக்கப்படும்போது அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் தவிசாளருக்கு எதிராக அல்லது அந்த உள்ளூர் அதிகாரசபை சார்பாக செயலாற்றவென உள்ளூர் அதிகாரசபையுடன் தொடர்புடைய ஏதேனும் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எதிராக தொடுக்கப்படுதல் வேண்டும்.

**13.** *(1)* இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தகுதிவாய்ந்த அதிகாரி — உட்பிரவேசதித்தலுக்கும் சோதனையிடலுக்குமான தத்துவம்.

(அ) (i) இந்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட கடமைகள் அத்தகைய வளவுகளின் குடியிருப்பாளரால் அல்லது சொந்தக்காரரால் இணங்கியொழுகிக் கொள்ளப்படுகின்றனவா ; அல்லது

(ii) ஏதேனும் வழிவகைகள் அவசியமானவையா என்பதுடன் அவசியமாயின் அவை நுளம்புப் பெருக்கத்தை அகற்றுவதற்கும் தடுப்பதற்கும் எவ்வளவு தூரம் அவசியமானவை,

என்பதையும் தீர்மானிக்கும் நோக்குடன் ஏதேனும் அளவீடு, ஆய்வுசோதனை அல்லது தேடுதலை நிறைவேற்றுதலுக்காக ;

(ஆ) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட வேண்டும் எனும் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் வேலையை அல்லது வழிவகைகளை நிறைவேற்றுவதற்காக,

ஏதேனும் நியாயமான நேரத்தில் ஏதேனும் வளவுகளுக்குள் பிரவேசிப்பதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் அளவீடு ஆய்வு அல்லது தேடுதல் என்பதை நிறைவேற்றற்பொருட்டு —

(i) சம்பந்தப்பட்ட அந்த வளவானது ஒரு சமய வணக்கத் தலமாக அல்லது பொதுமக்கள் செல்ல முடியாத இட மாகவுள்ளவிடத்து அத்தகைய வளவுக்கு பொறுப்பான ஆளிடமிருந்து அல்லது எவரேனும் தகுதிவாய்ந்த ஆளிடமிருந்து ; அல்லது

(ii) சம்பந்தப்பட்ட அந்த வளவுகள் தனியாளின் வதிவிட மாக உபயோகிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வதிவிடத்தின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாள ரிடமிருந்து,

அவ்வாறு உட்பிரவேசிப்பதற்கு எழுத்து மூலமான சம்மதம் பெறப்படல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2) இன் கீழ் பெறப்படத் தேவைப்படுத்தப்பட்ட சம்மதம் நியாயமற்ற முறையில் மறுக்கப்படுமிடத்தும், இச்சட்டத் தின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுக வில்லை என்பதைச் சந்தேகிக்கக் காரணம் உள்ளதென தகுதி வாய்ந்த அதிகாரி திருப்திப்படுமிடத்தும், தகுதிவாய்ந்த அதிகாரி விடயத்திற்கேற்ப அத்தகைய வளவுகளுள் அல்லது தனியாளர் வதிவிடங்களில் உட்பிரவேசிக்கும் நோக்குடன் நீதிவான் நீதிமன்றிடமிருந்து தேடுதல் ஆணையொன்றைப் பெற்று அத்த கைய தேடுதல் ஆணையினால் அவருக்கு அளிக்கப்பட்ட எல்லா அல்லது ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

*தகுதிவாய்ந்த அதிகாரியும் தகுதிவாய்ந்த அதிகாரியிலான கையளிப்பும்.*

**14.** (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக சுகாதாரச் சேவைகள் தலைமை அதிபதியே தகுதிவாய்ந்த அதிகாரியாதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை பயனுற நடைமுறைப் படுத்துவதற்காக பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும்.

(2) சுகாதார சேவைகள் தலைமையதிபதி தகுதிவாய்ந்த அதிகாரியென்னும் இந்தச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை அல்லது பணிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு சுகாதார மருத்துவ அலுவலருக்கு அல்லது ஏதேனும் பிரதேசத்திலுள்ள பொது சுகாதார பரிசோதகருக்கு அவசியமான தெனவும் உகந்ததெனவும் கருதும் போதிலெல்லாம் கையளிக்க லாம் என்பதுடன் எவ்வதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு கடமை அல்லது பணி அங்ஙனம் கையளிக்கப்பட்டதோ அவ்வதிகாரி அல்

லது அலுவலர் அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியின் கட்டுப் பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் அமைய அதனை நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.

(3) எவ்வதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிப்பு செய்யப்பட்டதோ அவ்வதிகாரியொரு வர் அல்லது அலுவலர் அவ்வாறு கையளிக்கப்பட்ட கடமையை அல்லது பணியை நிறைவேற்றுகையில் அல்லது புரிகையில் இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு வழங்கப்பட்ட அதே உட்பிரவேசித்தல் மற்றும் பரிசோதனைத் தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அதிகாரிக்கு அல்லது அலுவலர்களுக்கு விளைவிக்கப்படும் ஏதேனும் எதிர்ப்பு இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான தவ றொன்றாதலும் வேண்டும்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரி எவரேனும் அரச சுகாதார பரிசோ தகருக்கு அல்லது சுகாதார மருத்துவ அலுவலருக்கு இச்சட்டத்தின தும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அவசியமானதென தாம் கருதும் அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம் என்பதுடன் எவருக்கு அத்தகைய பணிப்புகள் வழங்கப்பட்டனவோ அத்தகைய அலுவலர் அவற்றுடன் இணங்கியொழுகுமாறு தேவைப்படுத்த லும் வேண்டும்.

*தவறுகள் பிடியாணையின்றி கைது செய்தகு தவறுகளாதல்.*

**15.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண் டின் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாகவுள்ளது எப்படியிருப்பினும் இச்சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும் அச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றி கைதுசெய்யத்தகு தவ றொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான குற்ற வழக்குத் தொடுப்புக்கு அனுமதி தேவைப் படுதல்.*

**16.** இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறொன்றிற்கான குற்றவழக்குத் தொடுப்பானது தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அந்த சார்த்தப்பெற்ற தவறு அங்கு நிகழ்ந்ததோ அந்த இடப் பரப்பிலுள்ள மருத்துவ சுகாதார அலுவலரின் அனுமதியுடன் தவிர தொடுக்கப்படலாகாது.

குற்றவழக்குத் தொடுப்பு நடபடிமுறை.

**17.** (1) குற்றவழக்குத் தொடுப்புக்கு முன்னர் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று சொந்தக்காரர் ஒருவரால் அல்லது குடியிருப்பாளர் ஒருவரால் புரியப்பட்டுள்ளதாகக் காணப்படுமிடத்து ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அத்தகைய தவறாளரை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் அத்தகைய சீராக்கல் வழிவகைகளை அந்த அறிவித்தல் கிடைக்கப்பெற்ற இரண்டு கிழமைகளுக்குள் மேற்கொள்ள அல்லது எடுக்கக்கோரி தவறாராளர், மீது எழுத்து மூலமான அறிவித்தல் வழங்குமாறு தேவைப்படுத்தப்படல் வேண்டும். இவ் உட்பிரிவின் கீழ் எவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டதோ அந்த ஆள் தேவைப்படுத்தப்பட்ட சீராக்க நடவடிக்கைகளை கடைப்பிடிக்க அல்லது எடுக்கத் தேவையான காலத்தை நீடிக்குமாறு வேண்டுகை செய்யலாம் என்பதுடன், பொதுச் சுகாதார பரிசோதகர் அந்த பிரதேச சுகாதார மருத்துவ அலுவலருடன் கலந்தாலோசனையுடன் அத்தகைய நீடிப்பினை வழங்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இரண்டு கிழமைகளுக்கு மேலதிகமான காலப்பகுதிக்கு நீடிப்பு வழங்கப்படலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட சீராக்கல் வழிவகைகளைக் கடைப்பிடிப்பதற்கான அல்லது எடுப்பதற் கான காலம் முடிவடைவதன் மீது, அறிவித்தலை வழங்கிய பொதுச் சுகாதார பரிசோதகர் கடைப்பிடிக்கப்பட்ட அல்லது எடுக் கப்பட்ட வழிவகைகளை சோதனை செய்தல் வேண்டும்என்பதுடன் சோதனையிடப்பட்ட ஒரு கிழமைக்குள் அந்த பிரதேச சுகாதார மருத்துவ அலுவலருக்கு அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப் பித்தலும் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், பொதுச் சுகாதார பரிசோதகர் அவசியம் எனக் கருதினால் சார்த்தப்பெற்ற தவறாளருக்கு எதிராக குற்ற வழக்குத்தொடுக்கப்படுவதனை சிபாரிசு செய்யலாம்.

(3) பொதுச் சுகாதாரப் பரிசோகர் குற்றவழங்குத் தொடுக்கப்படு தலை சிபாரிசு செய்யுமிடத்து மருத்துவ சுகாதார அலுவலர் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அத்தகைய சிபாரிசு கிடைக்கப்பெற்ற ஒரு கிழமைக்குள் அதற்காக அனுமதியை அளித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குற்றவழக்குத் தொடுக்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர் ஒருவர், அக்குற்ற வழக்குத் தொடுத்தலானது, உறுதியாகக் கூறிய சிபார்சுடன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ள தகவல்களை ஆராயும்போது குற்றவழக்குத் தொடுக்கப்படத் தேவையில்லை யெனக் கருதுவாராயின் சார்த்தப்பட்ட தவறாளரால் கடைப் பிடிக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட வழிவகைகளை அவர் சோதனையிட்டு அதுபற்றிய தனது சொந்த சிபாரிசினை தகுதி வாய்ந்த அதிகாரிக்குச் சமர்ப்பிக்கப்பட தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அச்சிபாரிசினைப் பெற்று இரண்டு கிழமைக்குள் தகுதி வாய்ந்த அதிகாரி சார்த்தப்பெற்ற தவறாளருக்கு எதிராக குற்ற வழக்குத் தொடுக்கப்படப்பட வேண்டுமா அல்லது தொடுக்கப் படலாகாதா என்பது பற்றி இறுதித் தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.

*தகுதிவாய்ந்த அதிகாரி முதலானோர் சமாதான அலுவலர் களாதல்.*

**18.** ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண் டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள் அந்தச் சட்டத்தின்கீழ் சமாதான அலுவலர்களுக்கு அளிக்கப்பெற்ற ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக, தகுதிவாய்ந்த அதிகாரியும், எவருக்கு ஏதேனும் பணி அல்லது கடமை கையளிக்கப்பட்டதோ அந்த எவரேனும் ஆளும் அத்தகைய பணி அல்லது கடமையை நிறைவேற்றலிலும் புரிகையிலும் சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அறிவித்தல்களின் சேர்விப்பு.*

**19.** இச்சட்டத்தின் 3 ஆம், 7 ஆம் பிரிவின்கீழ் அல்லது 17 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் வளவுகளில் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒருவர்மீது சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல், நேரடியாகவோ அல்லது அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரிடம் அறிவித்தலைக் கொடுப்பதன் மூலமோ அல்லது அத்தகைய வளவுகளுள் காணப்படும் துலாம்பரமான இடத்தில் அறிவித் தலை ஒட்டுவதன் மூலமோ செயற்படுத்தலாம்.

*சட்டம் குடியரசு முதலியவற்றை பிணித்தல்.*

**20.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கைக் குடியரசுக்கு ஏற்புடையதாதல் வேண்டுமென்பதுடன் குடியரசையும் ஏதேனும் அமைச்சு அல்லது அரச திணைக்களங்களையும் பிணித்தலும் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் மேற்கொள் ளப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை பாதுகாத்தல்.*

**21.** தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது ஏதேனும் சுகாதார மருத்துவ அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியின்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது கடமையைப் புரியும்படி அல்லது நிறைவேற்றும்படி கையளிக்கப்பட்ட எவரேனும் ஏனைய அலுவலர் அல்லது அதிகாரிக்கு எதிராக, நல்லெண்ணத்துடன் அத்தகைய சுகாதார மருத்துவ அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது ஏனைய அலுவலரால் அல்லது அதிகாரியினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக் காக விடயத்துக்கேற்ப ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை தொடுக்கப்படலாகாது.

*ஆட்கள் குழுமமொன் றினால் தவறுகள் புரியப்படல்.*

**22.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழும மொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாகவிருந்தால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழு வின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல் லது அலுவலர் ஒவ்வொருவரும் ;

(ஆ) அவ்வாட்கள் குழுமமானது பங்குடைமையொன்றாக இருந்தால், அப்பங்குடைமையின் பங்காளர் ஒவ்வொரு வரும் ;

(இ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்படாத குழு வொன்றாகவிருந்தால் அந்தக் குழுவின் உறுப்பினர் களான ஒவ்வொரு தனியாளும் ; அத்துடன்

(ஈ) அவ்வாட்கள் குழுவானது உள்ளூர் அதிகாரசபையாக விருந்தால் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் தவி சாளராக அல்லது உள்ளூர் அதிகாரசபை சார்பாக செயற்படுவதற்காக உள்ளூர் அதிகாரிகள் தொடர்பில் ஏதேனும் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பெற்ற எவரேனும் ஏனைய தகுதிவாய்ந்த அதிகாரி,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், அத்தவறானது அவரின் அறிவுக்கு எட்டாதவகையில் புரியப்பட்டுள்ளதெனவும் அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரி ய எல்லாவிழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோ

கித்துள்ளார் எனவும் நீதிமன்றத்தின் திருப்திக்கு அவர் எண்பிப்பாராயின் பந்தி (அ), (ஆ), (இ), (ஈ) வின் குறிப்பிடப்பெற்ற எவரேனும் நபர்கள் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

**23.** (1) அமைச்சரானவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் நெறிகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது அவற்றிற்கு பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றியும் அமைச்சரானவர் பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் நோக்கங்களுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் —

(அ) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு தகுதிவாய்ந்த அதிகார சபையால் வழங்கப்படவேண்டிய தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலின் ஏதேனும் படிவம் தொடர்பில் வழிகாட்டு நெறிகளை வழங்குதல் ;

(ஆ) நுளம்புப் பெருக்கத்தை இல்லாதொழிப்பதற்காக ஏதேனும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளரால் எடுக்கப்படவேண்டிய வழிவகைகளையும் உபயோகிக்கப்படவேண்டிய வகையினதான பீடைகொல்லிகளையும் சிபார்சு செய்தல் ;

(இ) நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காகவும், இல்லாதொழிப்பதற்காகவும் அமைச்சின் கீழான மலேரியா எதிர்ப்பு இயக்கங்களையும் ஏதேனும் அதனையொத்த பணிகளைச் செய்யும் முகவர் நிலையங்களுக்கு நுளம்புத் தடுப்பு வழிவகைகள் மீது வழிகாட்டு நெறிகளை வழங்குதல்.

(3) அமைச்சரால், ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியின்பின்னர் வசதிப் படக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து ஆனால், முன்னர் இதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட தெனக் கருதப்படும் தேதி வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**25.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலன்றி —

"சுகாதார சேவைகள் தலைமையதிபதி" என்பது (219 ஆம் அத்தியாயமான) சுகாதார சேவைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்று பொருள்படும் ;

"சுகாதார மருத்துவ அலுவலர்" என்பது, சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சுகாதார மருத்துவர் எனும் பதவிக்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது அப்பதவிக்கு பதிற்கடமைபுரியும் எவரேனும் அலுவலர் என்று பொருள்படும் என்பதுடன் மாநகர சபையின் நிருவாக எல் லைக்குள் சேவையிலுள்ள பிரதான சுகாதார மருத்துவ அலுவலரையும் பிரதி பிரதம சுகாதார மருத்துவ அலுவலரையும் சுகாதார மருத்துவரையும் உள்ளடக்கும் ;

"குடியிருப்பாளர்" என்பது, ஏதேனும் வளவுகளின் குடியிருப்பாளர் அல்லது அதற்கான பொறுப்பு முகாமைக் கட்டுப்பாடு என்பவற்றை தனது தனிப்பட்ட உரிமை காரணமாக அல்லது ஏனையோரின் முகவர் என்ற ரீதியில் வைத்திருக்கும் ஓர் ஆள் ஒருவர் எனப் பொருள்படும். ஆனால் விடுதிக் குடியிருப்பாளரை உள்ளடக்காது ;

"சொந்தக்காரர்" என்பது, கூட்டுச்சொந்தக்காரரொருவர், குத்தகையாளரொருவர், ஏதேனும் வளவுகளின் வாடகையை அல்லது வரும்படியைப் பெற்றுக்கொள்ள உரிமையுடைய தனியாளையும், நிறுவகத்தையும், கூட்டிணைக்கப்பட்ட குழுவையும், வளவுகளின் தகுந்த பராமரிப்புக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் தனியாளையும் உள்ளடக்கும் ;

"வளவுகள்" என்பது, ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டிடத்தின் ஏதேனும் பாகத்தைக் கொண்டுள்ள ஏதேனும் காணி எனப் பொருள்படும் ; அத்துடன்

"பொதுச் சுகாதார பரிசோதகர்" என்பது, சுகாதாரச் சேவைகள் திணைக்களத்தில், திணைக்களத்தினால் அத்தகைய பதவிக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக ஏதேனும் பணிகளின் புரிகைக்கு தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பட்ட உள்ளூரதிகார சபையின் எவரேனும் அரச சுகாதாரப் பரிசோதகரையும் உள்ளடக்கும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*